பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை ? காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 3 (20—10—71) புதன் வெளியூர்: ஐப்பசி 4 (21—10—71) வியாழன் [இதழ்: 105

பாம்பன் சாலைப் பாலம்

விரைவில் வேலை துவங்கும்

சென்னை, அக். 20—

மண்டபத்தையும் — இராமேசுவரத்தையும் இணைக்கும் பாம்பன் சாலைப் பாலம் கட்டும் வேலை விரைவிலேயே மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு அரசினால் தயாரித்து அனுப்பப்பட்ட ரூ 6 கோடி

(4-ம் பக்கம் பார்க்க)

போர் மூளும் நிலை தவிர்க்கப்படும்

இரு வல்லரசு நாடுகளின் கடைசி நேர முயற்சி

இஸ்லாமாபாத்தில் தீவிர இராஜதந்திர நடவடிக்கைகள்

புதுடில்லி, அக். 20—

இந்தியா — பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமையைத் தணிக்க அதிபர் யாகியாகானை நிர்ப்பந்திக்க இஸ்லாமாபாத்தில் தீவிர இராஜதந்திர நடவடிக்கைகளை அமெரிக்கா, இரஷ்யா ஆகிய இரு வல்லரசுகள் மேற்கொண்டிருக்கின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் போர் மூளுவது பற்றி வேறு சில முக்கிய மேலைநாடுகளும் கவலை கொண்டிருக்கின்றன.

எல்லையில் நிலைமை மோசமாவது பற்றி இந்திய அரசுடன் மல நாடுகள் நீடித்துத் தொடர்பு கொண்டு வருகின்றன.

இந்திய எல்லைக்கு அருகில் படைகளைப் பாகிஸ்தான் குவித்திருப்பதால், இந்தியா முன்னெச்சரிக்கையாக ஏற்பாடுகளை செய்ய நேர்ந்துள்ளதாக அமெரிக்கா உட்பட அந்த நாடுகளிடம் இந்தியா விளக்கியிருக்கிறது.

இந்தியாவுக்குப் போரைத் தொடங்கும் எண்ணம் இல்லை என்பதை, அந்நாடுகளிடம் இந்தியா உறுதியாகக் கூறியிருக்கிறது.

அமெரிக்கா முயற்சி

இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்குமிடையே போர் மூளாமல் தடுப்பதற்காக அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

இப்பிரச்சினை பற்றிப் பீகிங்கில் சீனத் தலைமையமைச்சர் சூ—யென—லாயுடன் விவாதிக்கும்படி அமெரிக்க அதிபரின் தனி ஆலோசர் கிசிங்கரிடம் கூறப்பட்டிருக்கிறது.

சோவியத் இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஈரான் மன்னர் முயற்சி

தெஹ்ரான், அக். 24—

"கிழக்கு வங்காளப் பிரச்சினை மீது இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூளாமல் தடுப்பதற்கு ஈரான், தன்னால் இயன்றதையெல்லாம் செய்யும்"

என்று ஈரான் மன்னர் ஷா, உறுதி கூறியிருக்கிறார்.

பறங்கிமலை பெயர் மாற்றம்

சென்னை, அக். 20—

பறங்கிமலையிலுள்ள போலீசு நிலையத்தின் தமிழ்ப் பெயர் மாற்றப்பட்டது; இனி 'தாமஸ் தோமையார் குன்று காவல் நிலையம்' என்று அழைக்கப்படும்; 'செயின்ட் தாமஸ் போலீஸ் ஸ்டேஷன்' என்ற ஆங்கிலப் பெயர் மாறாது.

முறுக்கு மீசையால் வந்த வினை!

பம்பாய், அக். 20—

மீசையை முறுக்கும் பழக்கத்தினால் ஒரு நபருக்கு வேலையே போய்விட்டது!

இந்த நிகழ்ச்சி இங்கு ஒரு தனியார் நிறுவனத்தில் நிகழ்ந்தது.

இங்குள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிவந்த விஜய் சிவாஜி என்பவர், தனது மேலதிகாரியின் முன் தனது கத்தை மீசையை முறுக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தால் வேலையை விட்டு நீக்கப்பட்டார்.

அவரை வேலை நீக்கம் செய்ததை எதிர்த்து, தொழில் தகராறு நீதிமன்றத்தில் பொறியியல் தொழிலாளர் சங்கம் வழக்குத் தொடுத்தது.

பின்னர், தொழிற்சங்கத்துக்கும்—அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தினருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில், 'அளவுக்கு மீறி முறுக்கு மீசை வைத்துக் கொண்டிருக்கும் ஊழியர்கள், தங்கள் மீசையின் அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டும்' என்று ஒப்புக்கொள்ளப்பட்டது; அதன்படி, விஜய் சிவாஜியும் தனது மீசையைக் குறைத்துக் கொண்டார்.

புதிய பேரூராட்சி மன்றங்கள்

சென்னை, அக். 20—

தாம்பரம் அருகிலுள்ள சிட்லபாக்கம்—பறங்கிமலைக்கு அருகில் உள்ள நந்தம்பாக்கம்—கோட்டம்பாக்கம் அருகிலுள்ள ஜாபர்கான் பேட்டை ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

சென்னை நகரையொட்டியுள்ள இப்பகுதிகட்கு, மேற்கொண்டு வசதிகளைப் பெருக்கும் நோக்குடனேயே இவ்வூராட்சிகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே இவ்வூராட்சி மன்றப் பகுதிகளில் விரைந்து முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது.

முஜிபுர் ரகிமான் கலகக்காரராம்

மக்கள் விரும்பினால் கருணை காட்டுவாராம்

அதிபர் யாகியா கானின் விநோதக் கூற்று

பாரீஸ், அக். 20—

'ஷேக் முஜிபுர் ரகிமானுக்குக் கருணை காட்ட வேண்டும்—என்று மக்கள் விரும்பினால் அதற்கு நான் தயாராக இருக்கிறேன்"

என்று பாகிஸ்தான் அதிபர் யாகியாகான், பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

"முஜிபுர் ரகிமான்மீது இரகசிய விசாரணை நடத்திக் கொண்டிருக்கும் இராணுவ நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தால் உங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்குக் கருணை காட்டுவீர்களா?"

என்று அந்தப் பத்திரிகையின் நிருபர் கேட்டார்; அதற்குப் பதிலளிக்கையில் யாகியா கான் கூறியதாவது:—

"நான் எந்த முடிவையும் மேற்கொள்வதற்கு முன்பு நாட்டிலுள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டும்; 'கருணை காட்ட வேண்டும்' என்று மக்கள் விரும்பினால் அப்படியே செய்வேன்; ஆனால் அவருடன் நான் எந்தவிதமான விவாதமும் நடத்தமாட்டேன்; அவர் ஒரு கலகக்காரர்; இப்போது விசாரணை நடத்தும் இராணுவ நீதிமன்றம், 'அவர் குற்றமற்றவர்' என்று தீர்ப்பு அளித்தாலன்றி, ஒரு கலகக்காரருடன் நான் பேச முடியாது."

15-ம் நூற்றாண்டு வண்ண ஓவியம்

திருவிழிமிழலை கோவிலில் கண்டுபிடிப்பு

தஞ்சாவூர், அக். 20—

தஞ்சை மாவட்டம் திருவிழிமிழலையில் உள்ள சிவன் கோவில் மண்டபத்தில், கி. பி. 15-ம் நூற்றாண்டில் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இதனைக் கண்டுபிடித்து அறிவித்துள்ளனர்.

மண்டபத்தின் உச்சியில் உட்தளத்தில் இவ்வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன; 'உக்கல் உடையான் எதிரிலி சோழ பல்லவராயன்' என்ற அரசனால் இம்மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த மன்னனின் பெயர், மண்டபத்தின் பல தூண்களிலும் செதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மண்டபத்தின் உட்புறத் தளம் முழுவதிலும் தீட்டப்பட்டிருந்த ஓவியங்களில் பெரும் பகுதி மறைந்துவிட்டன; ஒரு பகுதியே இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானை இந்தியா அச்சுறுத்துகிறதாம்

போரையே அதிபர் யாகியாகான் விரும்பவில்லையாம்

வெளியுலகிற்குப் பாகிஸ்தான் வேடம் போட்டுக் காட்டுகிறது

பாரீஸ், அக். 20—

'இந்தியா — பாகிஸ்தான் தகராறு பற்றி எந்த நேரத்திலும் — எந்த இடத்திலும் யாருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராக இருக்கிறேன்; ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகளில், இந்தியா — பாகிஸ்தான் தகராறு முழுமையாக இடம்பெற வேண்டும்.

'இதுவரையில் இந்தியா முக்கியமற்ற சில்லறைப் பிரச்சினைகளையே விவாதிக்க விருப்பம் தெரிவித்திருக்கிறது; ஏனெனில் அவர்களுடைய கட்சி அவ்வளவு பலகீனமானதாகும்.

'இந்தப் பேச்சுவார்த்தையின்போது யாரை வேண்டுமானாலும் நடுவராக ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்"

என்று பாகிஸ்தான் அதிபர் யாகியா கான், 'லா மாண்ட்' என்ற பிரெஞ்சுப் பத்திரிகையின் தனிச் செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் விதண்டாவாதத்துடன் கூறியிருக்கிறார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

மக்களுக்குத் தொல்லைகள் அதிகரிக்கக்கூடுமாம்

"இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பேச்சுவார்த்தையின் மூலம்தான் தீர்க்க வேண்டுமே தவிர, போரின்மூலம் அல்ல.

அகதிகள் பிரச்சினை தீராதாம்

போர் என்றால், இரு நாடுகளிலுமுள்ள மக்களுக்குத் தொல்லைகள் இன்னும் அதிகரிக்கத்தான் செய்யும்; மேலும் இதனால் அகதிகளின் பிரச்சினை தீராது.

இந்தியா அச்சுறுத்திக் கொண்டிருக்கிறதாம்

இந்தியா பாகிஸ்தானை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது; சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஈரான் முடியாட்சிக் கொண்டாட்டத்தின்போது இந்தியாவின் இந்த அச்சுறுத்தலைப் பற்றி சோவியத் தலைமையமைச்சர் கோசிஜினுடனும் — அதிபர் போட்கார்னியுடனும் நான் விவாதம் நடத்தினேன்; 'பாகிஸ்தானைவிட இந்தியா ஐந்து மடங்கு பெரிய நாடு; இராணுவ கண்ணோட்டத்துடன் பார்த்தாலும் பாகிஸ்தானைவிட இந்தியா ஐந்து மடங்கு அதிக பலமுள்ள நாடு; இந்நிலைமையில், பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?' என்று போட்கார்னியிடம் சுட்டிக் காட்டினேன்.

விதண்டாவாதத்துக்கு எல்லை வகுக்கிறார்

எங்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்!

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவு என்னவாயிருக்குமென்பது இந்தியாவின் போக்கையும் பொறுத்திருக்கும்.

கிழக்கு வங்காளத்தை எட்டு இந்திய இராணுவ டிவிஷன்கள் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கின்றன.

அத்துடன், இந்திய விமானங்கள் கிழக்கு வங்காளத்தின் மீது குண்டுகளையும் வீசிக் கொண்டிருக்கின்றன; நாசவேலைக்காரர்களுக்கும் இந்தியா ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கிறது.

போக்குவரத்தைச் செயலற்றதாக்குவதற்கும் — எங்கள் பொருளாதாரத்தைச் சீர்குலைய வைப்பதற்கும் இந்தியா தனது ஊடுருவல்காரர்களை அனுப்பிய வண்ணமாக இருக்கிறது."

பாகிஸ்தானுக்கு 75 போர் விமானங்கள்

சவூதி அரேபியா வழங்கும் நன்கொடையாம்

இலண்டன், அக். 20—

அமெரிக்காவில் செய்யப்பட்ட 75 போர் விமானங்களை சவூதி அரேபியா, பாகிஸ்தானுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாம்.

இத்தகவல், 'பைனான்ஷியல் டைம்ஸ்' என்ற ஏட்டில் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவால் தயாரித்து அனுப்பப்பட்ட இந்த விமானங்கள், சவூதி அரேபியாவிலிருந்து 10 நாட்களில் மேற்குப் பாகிஸ்தான் விமானத் தளத்திற்கு வந்து சேர்ந்துவிடுமாம்.

சவூதி அரேபியா அமெரிக்காவுடன் செய்துகொண்டுள்ள ஆயுத ஒப்பந்தத்தின்கீழ் இந்தப் போர் விமானங்களை அமெரிக்கா தயாரித்து அனுப்பியுள்ளதாம்.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.
திருவள்ளுவராண்டு 2002 ஐப்பசி 3 (20—10—71) புதன்

எதிரியை முறியடிக்கச் சூளுரைப்போம்!

"இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையில் எந்த நேரத்திலும் போர் மூளக்கூடும்" என்ற அச்சம் நிலவிவருகிறது. பாகிஸ்தான் தனது படைகளை எல்லையில் குவித்துவருவதாக நாள்தோறும் தகவல்கள் வந்துகொண்டுள்ளன.

பாகிஸ்தானின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தவும் — எதிர்த்துப் போராடவும் இந்தியப் படைகளும் ஆயத்தமாகி விழிப்புடன் இருந்துவருகின்றன; தாக்குதலைச் சமாளிக்கக்கூடிய வலிமை இந்தியாவுக்கு உண்டு என்பதை சின்னஞ்சிறிய பிள்ளைகூட அறியும்; எனவே, எதிரியிடமிருந்து இந்தியாவைக் காப்பது நமக்கு ஒன்றும் பெரிய காரியமல்ல; பாகிஸ்தானின் அச்சுறுத்தல் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை.

ஆனாலும், போர் மூளுவதைக் கூடியவரை தவிர்க்கவே இந்தியாவும், அமைதியில் நாட்டமுள்ள பிற நாடுகளும் விரும்புகின்றன. பாகிஸ்தானின் போக்கைக் கூர்ந்து கவனிக்குமிடத்து, 'போரைத் தவிர்ப்பது என்பது இயலாத ஒன்று' என்றே தெரிகிறது.

போர் மூளுமானால், முதல் தாக்குதல் பாகிஸ்தான் தரப்பிலிருந்துதான் ஏற்படுமே தவிர, இந்தியாவின் தரப்பிலிருந்து ஒருகாலும் ஏற்படாது. வலிச் சண்டைக்கு இழுக்கும் நோக்குடன் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டு இந்தியாவின் பொறுமையைச் சோதித்துவருகிறார் யாகியா கான். பொறுமையின் எல்லைவரை செல்ல இந்தியா தயாராகவே இருக்கிறது; பொறுமையையும் மீறி இந்தியா போரில் இறங்க வேண்டிய கட்டாயம் வருமானால் யாகியா கானின் படை 'துவம்ச'மாக்கப்படும் என்பது மட்டும் உறுதி!

நிலைமையறியாமல் துள்ளிக் குதிக்கிறார் — பாகிஸ்தானின் சர்வாதிகாரி! இந்தியா மட்டுமல்ல — உலக நாடுகளெல்லாம் அவருடைய பேச்சையும் செயல்களையும் கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

நாம் போரைத் தவிர்க்க விரும்புவது, அமைதியில் நாட்டம் கொண்டிருப்பதால்தானே தவிர, பாகிஸ்தானின் படைக்குப் பயந்து அல்ல என்பதை யாகியா கான் அரசு இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்துள்ள வங்காள தேச அகதிகளுக்குக் கோடிக்கணக்கில் பணம் செலவிட்டுவரும் இந்த நேரத்தில் போரும் மூளுமானால், இந்தியாவின் பொருளாதாரமும் — வளர்ச்சித் திட்ட வேலைகளும் பாதிக்கப்படும் என்பது உண்மை. போர் மூண்டால் நம்மைவிட அதிகமாகப் பாதிக்கப்படும் நாடு பாகிஸ்தான்தான் என்பதை எதிரிகள் உணரவேண்டும்.

முன்பு இந்தியாவிடம் பட்ட அடியை மறந்துவிட்டு மீண்டும் பாகிஸ்தான் வாலாட்டினால், அது இருக்குமிடம் தெரியாமல் அழிந்துவிடும் என்பது மட்டும் உறுதி. முன்னைவிடப் பல மடங்கு வலிமையை இந்தியப் படை பெற்றிருக்கிறது. இந்திய அரசும் இப்போது விழிப்புடன் இருந்துவருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நமது கழகத் தலைவரும் — முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் மக்களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டார்.

இந்தியாவை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் போர் மூண்டுவிடுமானால், தமிழர்களாகிய நாம் ஆற்ற வேண்டிய பங்கை அவர் வலியுறுத்தியிருக்கிறார்; தமக்கு அளிக்கப்பட்ட 'தமிழவேள்' பட்டத்தைப் பெற்றுக்கொண்டு பேசுகையில் அவர் தெரிவித்த கருத்து தமிழ் மக்களின் சிந்தனைக்குரியதாகும் :—

"என்னை 'முதல்வர்' என்றழைப்பதைவிட — 'டாக்டர்' என்றழைப்பதைவிட — 'தமிழவேள்' என்று அழைப்பதைவிட, 'இந்தியாவை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் சிப்பாய்களில் ஒருவன்' என்று அழைப்பதையே விரும்புவேன்.

"இந்திய எல்லையில் பகைவர்களால் நேரவிருக்கும் பேராபத்து எத்தகையதாக உருவெடுக்கவிருக்கிறது என்பதை நீங்கள் இதிலிருந்து புரிந்துகொள்வீர்கள்; ஆகவே, அந்த ஆபத்தை நீக்கிட — தடுத்திட — தகர்த்திட — தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழ்மகனும் சூளுரை எடுத்துக்கொள்ளும் காலம் வெகு விரைவில் வரவிருக்கிறது.

"டில்லியிலே நான், அங்குள்ள அமைச்சர்களைச் சந்தித்தபோதும் — அதிகாரிகளைச் சந்தித்தபோதும் — நிலைமைகளைச் சந்தித்தபோதும் — தமிழ்ச் சங்கத்தில் பேசியபோதும் — நிருபர்களைச் சந்தித்தபோதும், 'இந்திய மக்கள் — குறிப்பாகத் தமிழ் மக்கள், விரைவில் பல தியாகங்கள் செய்யவேண்டி வரும்' என்பதை உறுதியாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.

"இந்த எண்ணத்தில் நான் இருக்கின்றபோது, எனக்கு அளிக்கப்படும் பட்டங்களும் — பாராட்டுக்களும் — விருதுகளும் மிகுந்த மனமகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

"'இந்தியாவிற்கு எந்த ஆபத்து வருமோ' என்ற நிலை இருக்கிறது; 'ஆபத்து வந்தாலும், இறுதியாக இந்தியாதான் வெல்லும்' என்று உறுதியோடு கூறிக்கொள்வேன்.

"இந்திய நாட்டிற்காகச் செய்யப்படும் எந்தத் தியாகத்திலும், அது நாட்டு எல்லைக்கான போராட்டமானாலும் — விடுதலைப் போராட்டமானாலும், குறிப்பாகத் தமிழ் மண், தனது மான உணர்வை — வீரப்பண்பை உலகம் வியக்க மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது! மீண்டும் அத்தகைய வாய்ப்பு வருமாயின், அந்தத் தியாக உணர்வை — வீர உணர்வை — மான உணர்வை மெய்ப்பித்துக் காட்டத் தமிழகம் தயங்காது! இந்தச் சூளுரை, அனைவரின் உள்ளங்களிலும் நிறைந்திருக்க வேண்டும்!"

புதுவை நகருக்கு புதிய குடிநீர்த் திட்டம்

புதுவை, அக். 19—

பாண்டிச்சேரி நகருக்கான புதிய குடிநீர்த் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை, புதுவை பொதுப் பணித்துறை அமைச்சர் டி. இராமச்சந்திரன் பிமா நகரில் துவக்கிவைத்தார்.

விழாவிற்கு புதுவை முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக் தலைமை தாங்கினார்.

"இன்னும் 20 ஆண்டுக் காலத்திற்குப் புதுவையில் தண்ணீர்ப் பஞ்சமே ஏற்படாது" என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கடல்நீர் — அசுத்தப்படுத்தினால் நடவடிக்கை

"கடல் நீரில் எண்ணெய் போன்ற பொருட்களைக் கலந்து தூய்மையைக் கெடுப்போரை கட்டுப்படுத்த சர்வதேச நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்று பிரிட்டன் வேண்டுகோள்விடுத்தது.

"நெடுஞ்சாலைப் பிரிவுத் தொழிலாளர்கள் 120 பேருக்கு மத்திய சம்பள விகிதங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும், இதனால் புதுவை அரசுக்கு ரூ. 50,000 அதிகச் செலவு ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் இராமச்சந்திரன் கூறினார்.

ஆற்றல் மிக்கவர்களின் ஆலோசனைகள் அரசுக்கு அவசியம்

நல்லவைகளைச் செயல்படுத்துவது அனைவருக்கும் முன்மாதிரியாகும்

முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத்தல்

சென்னை, அக். 19

"ஒவ்வொரு துறையிலும் வல்லவர்கள் — நிபுணர்கள் — ஆற்றல் மிக்கவர்கள் — திறமையாளர்கள் முன்வந்து, பயன்தரத்தக்க நல்ல பணிகளை முன்மாதியாக செய்து வழிகாட்ட வேண்டும்; அத்தகையோரின் முன்மாதிரிகளை அரசாங்கமும் பின்பற்றி செயலாக்க முன்வரும்"

என்று முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் விழா ஒன்றில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

இருதயம் நின்றுவிடுவதால் ஏற்படும் திடீர் மரணம் போன்றவை விளைவிக்கக்கூடிய இருதய நோய்களை ஒரு சிறிதும் தாமதமின்றியில் சிகிச்சை செய்வதற்கேற்ற—நவீன மிக்க—துல்லிய துணைச் சாதனங்களுடன் கூடிய ஒரு இயங்கும் மோட்டார் வண்டி சிகிச்சைப் பிரிவை', பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள கே. ஜே மருத்துவமனையில் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த மோட்டார் வண்டி, ஒரு சிறிய மருத்துவமனையைப் போன்றதாகும்; திடீர் இருதயக் கோளாறு சம்பந்தப்பட்ட நோய்களை உடனுக்குடன் கவனித்து சிகிச்சை அளிக்கத்தக்க எல்லா நவீன சாதனங்களைக் கொண்டதாகும்.

உடலில் கோளாறு ஏற்பட்டுத் திடீரென்று இருதயத் துடிப்பைப் பாதிக்கிறது; நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குள் பலருக்கு மரணம் ஏற்பட்டு விடுகிறது; அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் — நோயாளி பாதிக்கப்பட்டவுடன் மேற்படி மருத்துமனைக்குத் தகவல் சொன்னால், உடனடியாக இந்த மோட்டார் வண்டி புறப்படுகிறது; நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டுவருகையில் வழியிலேயே தாமதமில்லாது உடனடியாக சிகிச்சை அளிக்கப்படுகிறது; இந்த வண்டியில் கம்பியில்லாத் தந்தி சாதனங்களும் அமைக்கப்பட்டுள்ளன; வண்டி போய்க்கொண்டிருக்கும்போதே 'வானி'லுள்ள டாக்டர்கள், தலைமை மருத்துவமனையில் உள்ள மூத்த டாக்டர் நிபுணர்களுடன தொடர்பு கொண்டு சிகிச்சை தொடர்பாக மேற்கொண்டு கலந்து ஆலோசித்து யோசனை பெற முடியும். இந்த நோய்க்கு என்றே தனியாகப் பயிற்சி அளிக்கப்பட்ட டாக்டர்கள்—நர்சுகள் இந்த வண்டியில் பணிபுரிவார்கள்.

இம்மாதிரியான ஒரு ஏற்பாடு ஆசியாவிலேயே — குறிப்பாக இந்தியாவில் — வேறு எங்கும் இல்லை; இதுவே இத்துறையில் முதல் முயற்சி.

இவ்விவரங்கள் அனைத்தையும் கே. ஜே மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கே. ஜெகதீசன் தம்முடைய வரவேற்புரையில் விவரித்தார்.

முதலமைச்சர் மேலும் பேசுகையில், இம்முதல் முயற்சியை மிகவும் பாராட்டிவிட்டு, இத்தகைய ஏற்பாடுகளை ஏன் அரசு மருத்துவமனைகளிலும் செய்யக் கூடாது என்று தாம் எண்ணமிடுவதாகவும், இது குறித்து அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்று உறுதி கூறுவதாகவும் கூறினார்.

"அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களுக்கு எல்லாத் துறையிலும் எல்லாமும் தெரியும் என்று நினைப்பது தவறானதாகும்; பல பிரச்சினைகளில் பல துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களும் — நிபுணர்களும் — திறமையாளர்களும், மேற்கண்ட முயற்சியினைப் போல் முன்மாதிரியாக வந்து செயல்படுத்திக் காட்ட முன்வரவேண்டும்; அதன் மூலம் இதர நிறுவனங்களும் — அரசாங்கமும் பின்பற்றுவதற்கு அதனால் ஊக்கம் ஏற்படும்" என்றும் கூறினார்.

நமது நாட்டு டாக்டர்களுக்கு தகுந்த வசதிகளும் — வாய்ப்புக்களும் அளிக்கப்பட்டால் மேலை நாட்டுத் திறமை வாய்ந்த டாக்டர்கள் எவருக்கும் பின்தங்கியவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும், அது குறித்து தாம் மிக்க மகிழ்ச்சி கொள்வதாகவும் முதல்வர் குறிப்பிட்டார்.

விழாவிற்கு டாக்டர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

உணவு அமைச்சர் திரு. ப. உ. சண்முகமும் கலந்துகொண்டனர்.

டாக்டர் (குமாரி) ஆரோக்கியதாஸ் நன்றி கூறினார்.

எம். ஜி. ஆர். வலியுறுத்தல்

இந்த நவீன சிகிச்சை வசதியை ஒட்டிய குருதிக் கொடை சேமிப்பு நிலையத்தை புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஏழ்மையின் காரணமாகக் குருதிக் கொடை வழங்க எவரும் முன்வரக் கூடாது; 'மக்களின் நல்வாழ்வுக்காக இதனைச் செய்கிறோம்' என்ற உணர்வுடன் மட்டுமே குருதிக் கொடை வழங்கவேண்டும்.

"நான் விபத்து ஒன்றுக்கு ஆளாகி—உயிர் மீண்டபோது, எனக்கு இரத்தம் செலுத்தப்பட்டது; அந்த இரத்தம், அதற்கு முன்பே வழங்கப்பட்டதுதான்; அதனால்தான் நான் உயிர் பிழைத்தேன்.

"எனக்கு இரத்தத்தைத் தந்தவர்கள், என்னுடைய தாய் தந்தையருக்குச் சமமானவர்கள்— வணங்கத்தக்கவர்களாவார்கள்."

'தமிழ்க்கலைக்களஞ்சியத்தில் வடமொழிச் சொற்கள் ஏன்?'

'அடுத்து வரும் தொகுப்புக்களிலேனும் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துவீர்'

சிறுவர் கலைக்களஞ்சிய வெளியீட்டு விழாவில் கலைஞர் வலியுறுத்தல்

சென்னை, அக். 19 —

'கலைக் களஞ்சியம்' — 'சிறுவர்கள் கலைக் களஞ்சியம்' ஆகிய தொகுப்புக்களில் நல்ல தமிழ்ச் சொல் இருக்க, வடமொழிச் சொற்களையே பயன்படுத்திவரும் போக்கினை முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இடித்துரைத்தார்.

சிறுவர்கள் கலைக் களஞ்சியத்தில் புதிய தொகுப்பை வெளியிட்டு அவர் பேசுகையில், சிறுவர்கட்குப் புதிய வகையில் எளிய சொற்களைக் கையாளவேண்டும் என்றும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினருக்கு அறிவுறுத்தினார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் குழந்தைகளுக்கான கலைக் களஞ்சியத்தின் மூன்றாம் தொகுதி, முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்த விழா, இராஜாஜி மண்டபத்தில் — தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில், முதலமைச்சர் வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், 'கலைக் களஞ்சியம்' ஆசிரியர் பெ. தூரன், தமிழ் வளர்ச்சிக் கழகத் துணைத் தலைவர் ந. மகாலிங்கம், பொருளாளர் வி. எஸ். தியாகராசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைவரின் உரைக்குப் பிறகு, பெ. தூரன் பேசினார்.

கலைக்களஞ்சியத் தொகுதியை முதலமைச்சர் வெளியிட — அதனை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் பேசுகையில் கூறியதாவது :—

"கலைக்களஞ்சியங்கள் தமிழில் வெளியிடப்படுதல் வேண்டும் என்ற விருப்பம் தமிழரின் உள்ளங்களில் எழுந்த நெடுநாளைய ஆசையாகும்; இந்தப் பணி தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சிறந்த முறையில் ஈடேற்றப்பட்டுள்ளது.

அதே முறையில், குழந்தைகளுக்கான இந்தக் கலைக்களஞ்சியத் தொகுதிகளும் இன்றைய நிலையில் மிகமிகத் தேவையானதாகும்; அதனால்தான் அரசும் தன்னாலியன்ற உதவியைச் செய்து வருகிறது.

இந்தக் கலைக்களஞ்சியத் தொகுதியில் குழந்தைகள் மட்டுமன்றிப் பெரியவர்களும் படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் பல விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

உதாரணத்துக்கு, 'கணவாய்' என்ற சொல்லுக்கு இதில் தரப்பட்டுள்ள விளக்கத்தைக் குறிப்பிடலாம்; 'கணவாய்' என்றால், 'இரண்டு மலைகளுக்கு நடுவேயுள்ள இடைவெளிப் பாதை' என்பது, தெரிந்த விளக்கம்தான்; ஆனால் இன்னொரு விளக்கமும் இருக்கிறது; கணவாய் என்பது, 'கடலில் வாழும் ஒரு வகை மீன்' என்பதாகும் அது.

'கணவாய்' என்றால், இப்படியும் ஒரு விளக்கம் இருக்கிறது என்பது பலருக்குப் புதியதாக இருக்கலாம்.

இதுபோல் பல புதிய விளக்கங்கள், கலைக் களஞ்சியங்களில் தொகுக்கப்படுகின்றன.

இத்தகைய விளக்கங்கள் பெரியவர்கள் படித்துத்தான் புரிந்துகொள்ளமுடியும் என்றில்லாமல் குழந்தைகளுக்கும் புரியும் வகையில் எளிமையான விளக்கங்கள் அளித்து இந்தத் தொகுதிகளை நிறைவேற்றியுள்ள தமிழ்வளர்ச்சிக் கழகத்துக்கு என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்லிக்கொள்வேன.

கூடுமானவரையில், இத்தொகுதிகளில் இனிமேலாவது தமிழ்ச் சொற்களையே பயன்படுத்த முயற்சி செய்யவேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும். குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையிலுள்ள — பழக்கத்திலுள்ள தமிழ்ச் சொற்களையே இந்தத் தொகுதிகளில் இடம் பெறச் செய்தல்வேண்டும்.

குறிப்பாக இதில், 'பண்டிகை' என்று ஒரு சொல் வருகிறது; 'பண்டிகை' என்பதை 'விழா' என்று சொன்னால், இன்றைக்குச் சிறு குழந்தைக்குக்கூட விளங்கக்கூடியதாக இருக்கிற சொல்தான்.

அதுபோலவே, 'எந்திரங்கள்' என்னும் சொல் — 'பொறிகள்' என்று சொன்னால் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் — 'பொறி', 'பொறியாளர்' என்ற அளவில் வளர்ந்திருக்கிறது.

தமிழில் தற்போது ஏற்பட்டுள்ள தமிழ் வளர்ச்சியை நாமெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம்; எனவே, அடுத்தடுத்து வருகின்ற புதிய புதிய விளக்கங்களைக் குழந்தைகளுக்கு நாம் தந்தாக வேண்டும்.

இந்தத் தொகுதியில் இருக்கின்ற சொற்களில், 'கழுகு' என்பதற்கு விளக்கம் இருக்கிறது; ஆனால் 'கழுதை' பற்றி இல்லை; அதனை குறை என்பதற்காகச் சொல்லவில்லை.

விஞ்ஞானம் வளர்ந்துவரும் இந்த யுகத்தில், புதுமையாக வருகின்ற சொற்களைக் கூடுமான வரையில், வழக்கத்திலிருக்கின்ற எளிமையான விளக்கத்துடன் அனுமதித்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, 'சைக்கிள்' என்கிற ஒரு சொல் தமிழாகவே ஆகிவிட்ட ஒன்று; இதை, 'துவிச்சக்கர வண்டி' என்று தமிழாக எண்ணிச் சொல்லிக்கொண்டிருந்துவிட்டு, அப்புறம் இதை, 'ஈருருளி' என்றும், 'அது 'ஈருருளியா—ஈருளியா' என்று குழப்பி மற்றவர்களையும் குழப்பும்வகையில் சொற்களை மொழிபெயர்க்கின்ற நிலை உருவாக்கப்படுதல் வேண்டாம்.

'சைக்கிள்' என்ற சொல்லை நான் உதாரணத்துக்குச் சொன்னதால், இதையும் தமிழாக நான் ஒப்புக்கொண்டுவிட்டதாகக் கருதவேண்டாம்; 'அத்தகைய குழப்பமான மொழி பெயர்ப்புகள் வேண்டாம்' என்பதற்காக இதைச் சொன்னேன்.

எதிர் காலத்தில் குழந்தைகள் கற்றுக்கொள்கின்ற சொற்கள் செழுமிய நோக்கத்தோடிருக்க வேண்டும் என்பதற்காக. இனி வரும் தொகுதிகளிலாவது திருத்தப்படுவதில் வேண்டும் என்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்."

தமிழ் வளர்ச்சிக் கழகத் துணைத் தலைவர் ந. மகாலிங்கம் நன்றி கூறினார்.

தமிழ்நாட்டில் ஊற்று நீர் ஆய்வுப்பணி

அமெரிக்க அமைதிப் பணித் தொண்டர்கள் ஒத்துழைப்பைத் தமிழக அரசு பயன்படுத்திக் கொள்ளும்

இராமநாதபுரம் — மதுரை — திருச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்

சென்னை, அக். 19—

தரைக்கு அடியிலுள்ள ஊற்று நீரை வெளியே கொண்டுவரும் ஆய்வுப் பணிகளுக்குத் தமிழக அரசு, அமெரிக்க அமைதிப் பணித் தொண்டர்களின் ஒத்துழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளும்.

இராமநாதபுரம், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நவம்பர் திங்கள் முதல் இத்தொண்டர்கள் பணியாற்றத் தொடங்குவர்.

தமிழ்நாடு ஊற்று நீர் ஆம்வு இயக்குநர் அலுவலக அதிகாரி ஒருவர் இதன் தொடர்பாகக் கூறியதாவது :—

"அமெரிக்க அமைதிப் பணித் தொண்டர்களின் ஒத்துழைப்பைத் தவிர, 'அப்ரோ' (உணவு உற்பத்தி நடவடிக்கை நிறுவனம்), 'யு.என்.டி.பி.' (ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு), 'யுனிசெப்' போன்றவைகளும் இப்பணியில் ஈடுபட்டிருக்கின்றன.

ஐ.நா. வளர்ச்சித்திட்டம் சென்னை நகரிலும், பாலாற்று நதிப் படுகையிலும், நெய்வேலிப் பகுதியிலும் முதல் கட்டப் பணிகளை நிறைவு செய்துவிட்டன.

காவிரி கழிமுகப் பகுதியில் இந்தத் திட்ட நிறுவனம், இரண்டாவது கட்டப் பணியை மேற்கொள்ளும்.

ஊற்று நீர் வசதியைப் பற்றி இந்த நிறுவனம் விரிவான ஆய்வு நடத்துவதுடன் மட்டுமன்றி உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேளாண்மை—மண்வளம் போன்ற ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்ளும்.

'ஆப்ரோ' திட்ட நிறுவனம், கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றுப் படுகையில் ஏற்கனவே பணிகளைத் தொடங்கிவிட்டது; கடினப் பாறைகளுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் ஆய்வுப் பணிகளை நடத்துவதும் அதன் நோக்கமாகும்.

1,000 கிராமங்களில் குழாய்க் கிணறுகள்

20 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும்

'யுனிசெப்' நிறுவனம், அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் தமிழ்நாட்டில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக 1,000 கிராமங்களில் 8,850 சிறுகுழாய்க் கிணறுகளை அமைக்க எண்ணியிருக்கிறது; இதனால் 20 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும்; ரூ. 2.65 கோடி இதற்காகச் செலவாகும்.

அறுவடை முடிந்தபின் விவசாயிகளுக்கு வேறு வேலை

தமிழக அரசு ஆலோசனை

அன்பில் தர்மலிங்கம் தரும் தகவல்

மன்னார்குடி, அக். 16—

"விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க அரசு நடவடிக்கை எடுத்தவருகிறது; சில மிராசுதாரர்கள் தங்களிடம் உள்ள நிலங்களை கொடுக்க முன்வந்திருக்கிறார்கள்.

"எல்லா விவசாயிகளுக்கும் தலா அரை ஏக்கர் நிலமாவது கொடுக்கத் தமிழக முதல்வர் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

"அறுவடை வேலையை இயந்திரங்கள் செய்வதைக் கண்டு விவசாயிகள் அச்சமடையத் தேவையில்லை.

"விவசாய வேலை முடிந்த பிறகு அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கத் தமிழக அரசு ஆலோசனை செய்து வருகிறது.

"சிறு விவசாயிகளுக்கும் — நடுத்தர விவசாயிகளுக்கும் விவசாயத்தை மேலும் பெருக்கக் கடனுதவி செய்யவும் அரசு ஆலோசனை செய்துவருகிறது"

என்று வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், நீடாமங்கலத்தை அடுத்த அரையூரில் சாவித்திரி அம்மாள் விவசாயப் பண்ணையில் 'கருணா' நெல்லின் முதல் அறுவடையைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

விழாவுக்கு வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சாமிநாதன் தலைமைதாங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இளங்கோவன், சித்தமல்லி சோமசுந்தரம், கும்பகோணம் துணைக் கலெக்டர் பாலகிருஷ்ணன், வேளாண்மை இயக்குநர் வெங்கடசாமி மற்றும் பலர் பேசினர்.

திரு. அ. பி. அரசு, அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்தினார்.

கழிவு நீரைக் குடிநீராக்கும் முறை

பிரிட்டனில் கண்டுபிடிப்பு

தொழிற்சாலைகளில் பயன்பட்டு பிறகு வீணாகி வெளியேறும் கழிவு நீர்—கரிக்கும் கிணற்று நீர் மற்றும் கடல் நீர் ஆகியவற்றிலிருந்து சுத்தமான தண்ணீரை மறுபயனுக்காகப் பிரித்தெடுக்கும் நவீன முறை ஒன்றை பிரிட்டனில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்தப் புதிய முறைக்குத் தேவைப்படுவது மின்சக்தியும் — சிறிதளவு இரசாயனப் பொருளும் தான்; கழிவு நீரிலிருந்து அசுத்தங்களை நீக்கி குடிநீர் பெறலாம்; கடல்நீரிலிருந்து உப்பு நீக்கி சுத்தமான தண்ணீர் பெறலாம்; அதேபோல் கரிக்கும் கிணற்று நீரையும் சுத்தமாக்கிவிட முடியும்.

பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படாமல் இருக்கும் ஏராளமான தண்ணீரை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் மாற்றப் பின்பற்றப்படும் முறைகளிலேயே மிக சிக்கனமானதும்— செம்மையானதும் இதுவே என்று கூறப்படுகிறது.

தெலுங்கப்பட்டியில் தி.மு.க. துவக்க விழா

28—9—71 அன்று தெலுங்கப்பட்டியில் புதிய தி. மு. க. கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் கணேசன் தலைமையில் நடைபெற்றது; குளித்தலை வட்டச் செயலாளரும், ஊராட்சி ஒன்றியத் தலைவருமான கு. வி. முத்துச்சாமி, எம். பாலன் பி.ஏ.பி.எல்., நன்னிலம் நடராசன் ஆகியோர் பேசினர்.

ஆலத்துடையான்பட்டி எம். ஜி. ஆர். மன்றம்

ஆலத்துடையான்பட்டி எம் ஜி ஆர். மன்றத்தின் சார்பில் மன்ற நிர்வாகிகள் தேர்தல், தி.மு.க, செயலாளர் ந. சண்முகசுந்தரம் தலைமையில், 25—9—71 அன்று நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் :— தலைவர் : எம். இரங்கசாமி; துணைத் தலைவர்: சி. மகாலிங்கம்; செயலாளர் : எஸ் நாகராசன்; துணைச் செயலாளர் : பி. தங்கையா; பொருளாளர்: கே. வடிவேல்; அவைத் தலைவர் : டி. நடேசன்.

'பாண்டிச்சேரி மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் தேவை'

முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக் கோரிக்கை

பாண்டிச்சேரி, அக். 19—

"மத்திய ஆட்சிப் பகுதியாக பாண்டிச்சேரிக்கு மாநிலத் தகுதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது; ஆனால், நிதி விவகாரங்களில் பாண்டிச்சேரி தனியாக இயங்கக்கூடியதாக இல்லை என்பதால் இந்தக் கோரிக்கை மாற்றப்பட்டிருக்கிறது.

"நிதி விவகாரங்களில் கட்டுப்பாடு மத்திய அரசிடம் இருக்கும் நிலையில், மாநிலத்திற்குரிய அதிகாரங்கள் அனைத்தும் பாண்டிச்சேரிக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதே இப்போதைய கோரிக்கையாகும்"

என்று முதலமைச்சர் எம். ஓ எச். பாரூக், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

மத்திய ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள எல்லா முறைகேடுகளும் விரைவில் அகற்றப்படும் என்றும், அரசாங்க அச்சகம் — கூட்டுறவுத் துறை — கல்வித் துறை ஆகியவற்றில் பல பதவிகளுக்கான ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காரைக்கால் பகுதியில் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது என்றும் இதுவரையில் சுமார் 2,000 கிராமங்கள் பயனடைந்துள்ளன என்றும் முதலமைச்சர் கூறினார்.

'மக்கள் தொகை கட்டுப்படுத்தாவிடில் வாழ்க்கைத் தரம் உயர வழியில்லை'

'குடும்ப நலத் திட்டத்தின் மூலமே குடும்பங்களில் அமைதி ஏற்படும்'

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

மதுரை, அக். 19—

"இந்த நாட்டின் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி 5 ஆண்டு திட்டங்கள் போட்டாலே வாழ்க்கைத் தரம் உயரும்; மற்ற உற்பத்திகளைப் பெருக்கி — மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாமல் இருந்தால், வாழ்க்கைத் தரம் உயராது.

"குடும்ப நலத் திட்டத்தால் தனி மனிதர் குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படும்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

மதுரை மாவட்டத்தில் 3 மாத காலத்திற்குள் 30,000 பேருக்கு அறுவைச் சிகிச்சை அளிப்பதற்கான தீவிரக் குடும்ப நலத் திட்டத்தை, அக். 15-ந் தேதியன்று இங்கு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கி வைத்தார்.

மதுரை மாவட்டக் கலெக்டர் திரு. கே. இலட்சுமிகாந்தன் பாரதி, மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் சுந்தரம், மாவட்ட குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி திருமதி டாக்டர் இலட்சுமி வாசுதேவன், இந்திய அரசின் வட்டார விளம்பர அதிகாரி திரு. வி. திருநாவுக்கரசு ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர்.

போலீசு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டபின், அவர்கள், விழா மேடைக்குச் சென்றார்.

அனைவரையும் வரவேற்று மாவட்டக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி டாக்டர் திருமதி இலட்சுமி வாசுதேவன் பேசுகையில், 'ஒவ்வொரு குடும்பமும் நல்ல குடும்பமாக மலர இத்திட்டம் உதவும்' என்று குறிப்பிட்டார்.

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முதலில் இத்திட்டத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும்; அப்படி நம்பிக்கை இல்லாதவர்கள் அந்தத் துறையிலிருந்து வேறு துறைக்குச் சென்றுவிடுவது நல்லது.

"நம் நாட்டிலும், பள்ளிகளில் மாணவர் உணரும் வகையில் மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் அபாயம்—'ஐ.—ஆர்.-8' போன்ற வீரிய வித்து பயிர் செய்வதால் ஏற்படும் உணவு உற்பத்திப் பெருக்கம் போன்றவை சம்பந்தமாகக் கணக்குகள் போட்டு உணர்த்தலாம்."

மதுரை மருத்துவக் கல்லூரி தி. மா. மு. க. தேர்தல்

மதுரை மருத்துவக் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தேர்தல், 11—10—71-ல் சூரிய இராமகிருட்டினன் தலைமையிலும் — மதுரை மாணவர் தலைவர் அ. மா. பரமசிவன் முன்னிலையிலும் நடைபெற்றது.

தலைவராக இராம. செயபால் நாராயணன்; செயலாளராக ம. ஓடையன்; துணைச்செயலாளராக பி. வேதமூர்த்தி; பொருளாளராக ப. கோபாலகிருட்டினன்; செயற்குழு உறுப்பினர்களாக ஏ. கவுசுகான், சூரிய. இராமகிருட்டினன், பெரி. சுப்பிரமணியன், சதாசிவம், த. இராதாகிருட்டினன், சுப. அன்பழகன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளைப் பாராட்டி மாணவத் தோழர்கள் பேசியபின், திரு. பாண்டியன் நன்றி கூறினார்.

பாகிஸ்தானுடன் உறவு சீர்படுமா?

யாகியா கான் --- இந்திரா காந்தி சந்திப்பு எதிர்பார்ப்பதற்கில்லை

புதுடில்லி, அக். 20—

"வங்காள தேசப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வும், வங்காள தேச மக்களுக்கு -- அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மனநிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும்.

"ஒரு சுதந்தரமான தேர்தலில் வங்க தேசமக்களின் பிரதிநிதிகளுக்கு பெரும்பான்மை பலம் கிடைத்திருக்கிறது; இந்தத் தேர்தல்கள், யாகியா கானின் இராணுவ ஆட்சியில் நடந்திருப்பதால், அவை சுதந்தரமாகவும்-- நேர்மையாகவும் நடந்திருக்கும் என்பதைப் பற்றி சந்தேகம் இருக்க முடியாது; எனவே, இந்தத் தேர்தலின் முடிவை எவரும் புறக்கணிக்க முடியாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி செய்தியாளர்களிடம் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

நிலைமையை மோசமாக்கியவர்கள் கடமையை உணரவேண்டும்

எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ள படைகளை இரண்டு நாடுகளும் திரும்பப் பெறவேண்டும் என்று யாகியா கான் கூறியுள்ள யோசனையைப் பற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோது, அவர் குறிப்பிட்டதாவது :—

"வங்காள தேசத்தில் அடக்குமுறைகளை நிறுத்தி --- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செயல்படக்கூடிய நிலைமைகளைத் தோற்றுவிப்பதே பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் காட்ட வேண்டிய முதல் அறிகுறியாகும்.

"இப்பிரச்சினை அவ்வளவு சாதாரணமானதல்ல; இந்த நிலைமை இப்போது தோன்றியதல்ல; எல்லை நெடுகிலும் படைகளைக் குவித்தும் -- 'புனிதப் போரு'க்கு அழைப்பு விடுத்தும் -- இந்தியாவுக்கு எதிராக வெறுப்புப் பிரச்சாரத்தைத் துவக்கியும் பாகிஸ்தான், நிலைமையை மோசமாக்கிவிட்டது; மேலும், பாகிஸ்தான் படைகள் திரும்பி வெளியேறக்கூடிய இடம் எல்லைக்கு அண்மையில் இருக்கிறது; நம்முடைய படைகள் திரும்ப வெளியேறும் இடங்கள் எல்லையிலிருந்து வெகு தூரத்தில் உள்ளன; இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும்."

அவருடன் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

"இந்திரா காந்தியை சந்தித்துப் பேசத் தயார்" என்று பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் கூறியிருப்பது பற்றிக் கேட்டபோது, தலைமையமைச்சர் கூறியதாவது :-

"வங்காள தேசம் பிரச்சினை, இந்தியா -- பாகிஸ்தான் பிரச்சினையல்ல; எனவே, அது பற்றிப் பாகிஸ்தான் அதிபருடன் பேசுவதற்கு எதுவும் இல்லை."

ஐ. நா. நோக்கர்கட்கு அவசியம் என்ன இருக்கிறது?

"ஐ. நா. நோக்கர்களை நிறுத்தும் யோசனை பற்றி இந்தியாவின் நிலை என்ன?" என்று கேட்டபோது இந்திரா கூறியதாவது :—

"ஐ. நா, நோக்கர்களை நிறுத்த வேண்டிய அவசியமில்லை; அகதிகள் பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் திரும்புவதற்கு ஏற்ற நிலைமைகளை வங்காள தேசத்தில் ஏற்படுத்துவதை உத்தரவாதம் செய்யும்படி ஐ. நா. பார்த்துக்கொள்ள வேண்டும்; அப்போது ஐ. நா. ஒரு யோசனையை வெளியிடலாம்; அந்தக் கட்டத்தில் அதுபற்றிப் பரிசீலிக்கப்படலாம்."

'பொம்மை அரசு' பரிகாரமாகாது

இந்தியாவுடன் பிரச்சினைகளை விவாதிக்கப் பாகிஸ்தான் அதிபர் தயாராக இருப்பதாகச் சொல்லப்படும் செய்திகள் பற்றிக் கேட்டபோது அவர் குறிப்பிட்டதாவது :—

"உறவை வளர்க்க இரு நாடுகளிடையே உள்ள பல பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்படலாம்; வங்காள தேசப் பிரச்சினை, வங்காள தேசத்தில் தீர்க்கப்பட வேண்டும்; ஆனால், அங்கு பொம்மை அரசு ஏற்படுத்துவது பிரச்சினையைத் தீர்க்க உதவி செய்வதாகாது."

எப்படி அவர்களுடன் கைகுலுக்க இயலும்?

"பாகிஸ்தானுடன் போரைத் தூண்டிவிடவோ அல்லது போராக உருவாகக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்யவோ இந்தியா நிச்சயமாக விரும்பவில்லை; ஆனால் இது ஒரு தரப்பினரை மட்டும் பொறுத்த பிரச்சினையல்ல; முஷ்டிகளைத் தூக்கியுள்ள கைகளுடன் நாம் கைகளைக் குலுக்க முடியாது."

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம்

சென்னை, அக். 20—

தமிழ்நாடு சட்டப் பேரவை நாளை காலை 10 மணிக்குக் கூடுகிறது.

24-வது அரசியல் சட்ட திருத்த மசோதா (மத்திய மசோதா)வை அங்கீகரிப்பது--மதுவிலக்கு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பிறப்பித்த அப்காரி அவசரச் சட்டத்துக்குப் பதிலான மசோதாவை நிறைவேற்றுவது போன்ற முக்கியமான அலுவல்களையே இக்கூட்டத் தொடர் கவனிக்கும்.

சட்டப் பேரவை தொடங்கும் நாளன்றே 24-வது திருத்த மசோதாவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் தீர்மானத்தை, அரசுக் கட்சித் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்மொழிவார்.

அன்று மாலை கூடும் மேலவையில் இந்தத் தீர்மானத்தை முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் கொண்டுவருவார்.

நடக்க இருப்பவை

22--10--71

சென்னை 30-வது வட்டம்

தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 7-மணிக்கு பெருமாள் கோயில் தோட்டம் முதல் சந்தில்; தலைவர் : எம். ஆர். சந்திரன் ; பேசுவோர் : அமைச்சர் மு. கண்ணப்பன், கோவை மு. இராமநாதன் எம்.எல்.சி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., பி. ஆர். இலட்சுமிகாந்தன், அரு. சக்கரபாணி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவு மதிப்புள்ள திட்டத்தை மத்திய போக்குவரத்து அமைச்சுத்துறை அங்கீகரித்துள்ளது. இது இப்போது நிதியமைச்சுத் துறையின் அங்கீகாரத்துக்காகக் காத்திருக்கிறது.

இந்தச் சாலை, இரயில் பாலத்துக்குத் தெற்கே, இரயில் பாதைக்கு இணையாகச் செல்லும்; இதன் நீளம் 6000 அடியாக இருக்கும்.

இந்தப் பாலம் அமைக்கப்பட்டபின், இராமேசுவரத்துக்கு மண்டபத்திலிருந்து வண்டி -- வாகனங்கள் நேரே செல்ல முடியும்.

பொள்ளாச்சித் தொகுதி கழக வேட்பாளர்

ஊத்துக்குழி மோகன்ராஜ் தேர்வு

சென்னை, அக் 20—

பொள்ளாச்சித் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடக் கழக வேட்பாளராக ஊத்துக்குழி பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. மோகன்ராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பொள்ளாச்சித் தொகுதிக்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு தி.மு.க. ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் கூடி ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

பின்னர், 'கழகத் தலைவர் -- பொதுச்செயலாளருடன் கலந்தாலோசித்து வேட்பாளர் பெயரை அறிவிப்பார்' என்று ஆட்சி மன்றக் குழு முடிவு செய்தது.

அதன்படி, பொதுச்செயலாளர் நாவலருடன் கலந்து பேசி, கலைஞர் இந்த அறிவிப்பைச் செய்தார்.

தோழர் மோகன்ராசுவுக்கு 30 வயதாகிறது; இன்டர்மீடியட் வரை படித்துள்ள இவர் 5 ஆண்டுக்காலம் விமான ஓட்டியாகவும் பணியாற்றியிருக்கிறார்.

இப்போது இவர் ஊத்துக்குளி பேரூராட்சி மன்றத் தலைவராக இருக்கிறார்.

கே. ஏ. கிருஷ்ணசாமி

"அடுத்து வரவிருக்கும் நாடாளுமன்ற மேலவைக்கான தேர்தலில், தோழர் கே.ஏ. கிருஷ்ணசாமிக்கு இடமளிப்பது" என ஆட்சி மன்றக் குழு முடிவு செய்துள்ளதாகவும் கலைஞர் அறிவித்தார்.

முஸ்லிம் லீக் உறவு முறிந்துவிடவில்லை

பொள்ளாச்சியில் தோழமைக் கட்சிகளின் ஆதரவுடனேயே தி. மு. கழகம் போட்டியிடும்

கழகத் தலைவர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, அக். 20--

"முஸ்லிம் லீக் கட்சியில் உள்ள ஒருசில நண்பர்கள் மேடையில் பேசியது பற்றியும் -- அதைத் தொடர்ந்து கழகத் தோழர்கள் ஒரு சிலர் பேசியதைத் தொடர்ந்தும், கழகத்தினருக்கும் -- முஸ்லிம் லீகுக்கும் இடையே கசப்பு உணர்ச்சி வளர்ந்துவருவதாகத் தோன்றினாலும்கூட, கழகத்துக்கும் -- முஸ்லிம் லீகுக்கும் உள்ள நீண்ட நெடுங்கால உறவை அது எந்தவிதத்திலும் பாதித்துவிடவில்லை.

"இதற்கு எடுத்துக்காட்டாக, சென்னை மாநகராட்சி 19-வது வட்ட இடைத் தேர்தலில் கழக வேட்பாளரை முஸ்லிம் லீக் ஆதரிக்கிறது.

"பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில், வலது கம்யூனிஸ்டு -- இந்திரா காங்கிரசு -- முஸ்லிம் லீக் -- தமிழரசுக் கழகம் -- சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய தோழமைக் கட்சிகளின் ஒத்துழைப்பைத் தி.மு. கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் அக்கட்சிகளுடன் தொடர்பு கொண்டு கோரியிருக்கிறார்; அவர்களும் ஏற்கனவே அமைந்துள்ள முற்போக்குக் கூட்டணி அடிப்படையில் தங்கள் ஆதரவைத் தர ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்.

"முஸ்லிம் லீகுக்கும்--கழகத்துக்கும் இடையே எழுந்துவிட்ட விரும்பத்தகாத உணர்ச்சிகள் இறங்குவதற்கு ஏற்ற வகையில் இரண்டு கட்சிகளின் தலைமையில் உள்ளவர்களும் பேசித் தீர்த்துக்கொள்ளுவது என்பது இயலாத ஒன்று அல்ல."

---கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி

(செய்தியாளர்களிடம்)

இந்திரா காந்தி வெளிநாடு பயணம்

'தேதியில் மாறுதல் இல்லை' எனத் தகவல்

அமெரிக்கா மற்றும் ஐந்து ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்

புதுடில்லி, அக். 20—

பாகிஸ்தானின் போர் ஆயத்தங்களினால் எல்லையில் எழுந்துள்ள நிலைமை காரணமாகத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத் திட்டத்தில் மாறுதல் எதுவும் இராது.

மேற்கத்திய நாடுகளில் மூன்று வாரகாலச் சுற்றுப்பயணம் செய்வதற்காக இந்திரா காந்தி இம்மாதம் 24-ந் தேதி டில்லியிலிருந்து புறப்படுகிறார்.

பெல்ஜியம், ஆஸ்திரியா, பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி ஆகிய 5 மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் 20 நாள் சுற்றுப்பயணத்துக்கான நிகழ்ச்சிகள் இறுதியாக்கப்பட்டுவிட்டன.

அமெரிக்க அதிபர் நிக்சன், மேற்கு ஜெர்மனி தலைமையமைச்சர் பிராண்ட், பிரிட்டிஷ் தலைமையமைச்சர் எட்வர்ட் ஹீத், பிரெஞ்சு -- பெல்ஜியம் -- ஆஸ்திரிய அரசுகளின் தலைவர்கள் ஆகியோருடன் இந்திரா காந்தி நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் மற்றெல்லா அனைத்து நாட்டுப் பிரச்சினைகளையும்விட வங்காள தேசப் பிரச்சினையே மிக முக்கியமான இடத்தைப் பெறும்.

மேற்கத்திய நாடுகளின் அரசுகள் விடுத்த அழைப்பின் பேரில் தலைமையமைச்சர் செல்கிறார்.

அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதுடன், வெளிநாட்டுக் கொள்கை உரைகள் -- நிருபர் கூட்டங்கள் -- டெலிவிஷன் பேட்டிகள் -- நாடாளுமன்ற உறுப்பினர்கள்-மற்ற தலைவர்கள்--பத்திரிகை ஆசிரியர்கள்--எழுத்தாளர்கள் -- கலைஞர்கள்--மற்ற துறைகளில் புகழ் பெற்றுள்ளவர்களைச் சந்திப்பது ஆகிய நிகழ்ச்சிகளும் தலைமையமைச்சரின் அலுவல் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

அக். 54-ந் தேதி புறப்பட்டு முதலில் பெல்ஜியம் செல்கிறார்— அங்கு மூன்று நாட்கள் தங்குவார்.

பின்னர், 26-ந் தேதியிலிருந்து வியன்னா (ஆஸ்திரியா) சென்று 29-ந் தேதிவரை தங்கிவிட்டு அன்று இலண்டன் செல்வார்.

பிரிட்டனில் 5 நாட்கள் தங்குவார்; அங்கு பிரிட்டிஷ் தலைமையமைச்சர் எட்வர்டு ஹீதுடன் பேச்சு நடத்துவார்.

நவம்பர் 3-ந்தேதி நியூயார்க் செல்வார்; அங்கு ஐ. நா. பொதுச் செயலாளர் ஊ-தாண்டுடன் பேச்சு நடத்துவார்.

நவம்பர் 4-ந் தேதி வாஷிங்டன் செல்வார்; அங்கு அதிபர் நிக்சனுடன் பேச்சு நடத்துவார்.

பாரிஸ் போகும் வழியில் 6-ந்தேதி நியூயார்க் திரும்புவார்.

பிரெஞ்சுத் தலைநகரான பாரிசில் நவ. 7-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை தங்கியிருப்பார்.

மேற்கு ஜெர்மனியில் 19, 11-ந் தேதிகளில தங்கியிருப்பார்.

நவ. 12-ந் தேதி இந்தியாவுக்குப் புறப்படுவார்.

பாகிஸ்தான் அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ள அடக்குமுறையால் கிழக்கு வங்காளத்திலிருந்து ஏராளமான (இதுவரையில் 90 இலட்சம்) அகதிகள் வந்திருப்பதால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள சமூக--பொருளாதாரப் பிரச்சினைகளை இந்த நாடுகளின் அரசாங்கத் தலைவர்களிடம் தலைமையமைச்சர் விளக்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) [illegible] வெளியிடப்பெற்றது.